உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்-05 | சோபகிருது வருடம் ஆடி திங்கள் ஜூலை 2023 | பூமி-05

## மனவளர்ச்சி குன்றிய விசேட தேவையுடைய மாணவர்களின் சிறப்பிதழ்





## 20 ஆண்டுகள் நிறைவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை

சிவபூமி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தி அடைகிறது சிவ பூமி என்ற பெயரில் ஒரு சமூக நிறுவனத்தை உருவாக்கும் வாய்ப்பு 2000 ஆம் ஆண்டு எமக்கு கிடைத்தது லண்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் தொடர் சொற்பொழிவு ஆற்றி விட்டு நாடு திரும்பிய பின்பு யாழ்ப்பாண போதனை வைத்தியசாலையில் கண்சத்திர சிகிச்சைக்கூடம் கட்டும் முயற்சியில் சிறியேன் ஈடுபட்டேன்.அந்த வேளையில் தான் ஒரு நிறுவன ரீதியான பணியாக இந்த நிதிகளை வழங்குவது பயனுடையதாக இருக்கும் என பலரும் எடுத்துரைத்தார்கள். அன்னை சிவத்தமிழ் செல்வி அவர்களும் ஒரு அறக்கட்டளையை துவக்கி வைத்து அதனூடாக நிதி வழங்கினால் நல்லது என்றார்கள். அந்த வேளையில் தான் உறங்கி எழும்போது என் சிந்தையில் எழுந்த நாமம் சிவபூமி என்ற பெயர். அதே ஒரு அடையாளமாக

தொடர்ச்சி 02ம் பக்கம்

வைத்து சிவபூமி அமைப்பு என்ற பெயரில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்புக்கு சிகிச்சைக்காக போகின்ற புற்றுநோயாளர்களுக்கு 2000 ஆம் ஆண்டு நிதி உதவி செய்வதற்காக சிவபூமி எனும் அமைப்பை தோற்றுவித்தோம். அந்த அமைப்புதான் இப்பொழுது சிவபூமி அறக்கட்டளையாக வளர்ச்சி பெற்று உள்ளது. சிவபூமி அறக்கட்டளை தனது முதலாவது காரியம் பணியாக சிறுவர் மனவிருத்தி பாடசாலையை நிறுவியது. சிறுவர் மனவிருத்தி பாடசாலை ஒன்றை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயத்தில் உரையாற்றச் சென்ற வேளையில் அங்கு ஒரு மணம் வளர்ச்சி குறைந்த மாணவன் நடந்து கொண்ட நல்ல முயற்சிகளைக் கண்டு அவருடைய பெற்றோரிடம் இவர் எங்கே படிக்கின்றார் என்று கேட்டேன். அவர்கள் சீனப் பெண்மணி நடத்தும் பாடசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். இரவிலே பிரசங்கம் பகலிலே அந்த பத்து நாட்களும் சிங்கப்பூரில் இருக்கின்ற மணவாளர்ச்சி குறைந்த பிள்ளைகள் இருக்கின்ற பாடசாலையை தினமும் போய் தரிசித்தேன். அதனுடைய பயன் தான் நாடு திரும்பியதும் கண் வைத்திய நிபுணர் டாக்டர் குகதாசன் தம்பதியினரிடம் அவர்களுடைய உதவியை பெற்று அவருடைய வீட்டிலே சிவபூமி மனவளர்ச்சி பாடசாலையை ஆரம்ப முயற்சியாக ஆரம்பித்தோம். அவர்களுடைய வீட்டு விராந்தியிலே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 2004 ஆம் ஆண்டு நிரந்தர கட்டடத்தில் கோண்டாவிலில் ஆரம்பிக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு ஆவணி சதுர்த்தி அன்று கோண்டாவிலே திருமதி.குகதாசன் அவர்களின் உறவினர்களால் வழங்கப்பட்ட நாலரைப் பரப்பு நிலத்திலே இந்த புதிய பாடசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணிகள் ஆரம்பம் ஆகியது காலம் சென்ற ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் உயர் திரு.க.சிவாஜி அவர்கள் அடிக்கல் நாட்டினர். அப்பொழுது எமது அறக்கட்டையில் எந்தவிதமான நிதி வசதியும் இல்லை. ஆனால் அடிக்கல் நாட்டும்போது லண்டனில் வாழுகின்ற மகாதேவா ஜெயசீலர் என்ற அன்பர் எனக்கு 5 லட்சம் ரூபாய் தந்து இந்தப் பணியை ஆரம்பிக்க உதவினார்கள். திரு அருளானந்தம் என்று லண்டனில் வாழ்பவர் லண்டனில் இருந்து வருகை தந்திருந்தபோது அடிக்கல் நாட்டு விழாவிற்கு வந்திருந்தார்கள். தெல்லிப்பளையை சேர்ந்த ச.ஆறுமுகநாதன் என்பவர் கட்டட பொறுப்பை ஏற்று நல்ல முறையிலே கட்டடத்தை கட்டி தந்தார்கள். 2004 ஆம் ஆண்டு சிவபூமி பாடசாலை நிரந்தர கட்டடத்தில் கோண்டாவிலே திறந்து வைக்கப்பட்டது. இதனை அன்னை தங்கம்மா அப்பா குட்டியவர்கள் திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆண்டு 20 ஆண்டுகள் பூர்த்தி அடைகின்றது. சிவபூமி பாடசாலை சாதித்தது ஏராளம். சிவபூமி பாடசாலையினுடைய மாணவர்கள் மூன்று தடவை சர்வதேச ரீதியிலே நடக்கின்ற மாற்று வழுவுள்ளோருக்கான விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி பதக்கங்கள் பெற்றார்கள். கிரீஸ் நாட்டில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டியிலும், பின்பு

**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

ஆஸ்திரேலியா நியூ காசில் மாநிலத்தில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டியிலும், 2014 ஆம் ஆண்டு அமெரிக்காவில் கலிபோர்னியாவில் நடைபெற்ற விசேட தேவையுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியிலும் சிவபூமி பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி இலங்கை தமிழர்களுக்கு பெருமை சேர்த்ததோடு பதட்டங்களோடு வந்தார்கள். 2021 ஆம் ஆண்டு இலங்கையில் சிறந்த மாற்று வலுவருக்கான பாடசாலை என்ற தகுதியை முதல் இடத்தில் சிவ பூமி பாடசாலை பெற்று கொழும்பில் நடைபெற்ற விசேட விழாவில் சிவபூமி பாடசாலை கௌரவிக்கப்பட்டது. சிவபூமி பாடசாலையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கற்று சிலர் இன்று தொழில் முயற்சியிலே ஈடுபட்டுள்ளார்கள். தற்பொழுது 100க்கும் மேற்பட்ட மாற்று வழுவுள்ள மாணவர்கள் படிக்கின்றார்கள். இரண்டாவது பாடசாலையாக கிளிநொச்சி கனகபுரத்திலும் இரண்டு மாடியில் ஒரு சிவபூமி பாடசாலை கட்டியுள்ளோம். திருகோணமலையிலும் ஒரு பாடசாலை கட்டப்பட்டு. அந்தப் பாடசாலை திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. 20 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த பணி ஆரம்பிக்கும் போது மிகவும் கஷ்டப்பட்டு இது வெற்றி பெறுமோ என்று பலரும் வினா எழுப்பிய காலத்திலே உலக அரங்கிலயே சாதனை படைத்து சிவபூமி என்று உயர்ந்து நிற்கின்றது. இந்த பாடசாலையினுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், நிதி உதவி செய்த உள்நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் இருக்கின்ற அன்பர்கள், நிலத்தை அன்பளிப்புச் செய்த அத்தனை பேருக்கும் நன்றிக்குரியவர்கள். இந்த பாடசாலை காலையில் சிற்றுண்டியும் மதியம் மதிய உணவும் தொடர்ந்து இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்தோடு இலவச கல்வியும் இலவச பஸ் சேவையும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். குடா நாட்டின் பல பாவங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து கற்கின்றார்கள். எதிர்காலத்தில் இந்த மன வளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்கான நவீன செயல்திட்டங்களையும் நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கின்றோம். ஒத்துழைத்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கலாநிதி.செஞ்சொற்செல்வர்.ஆறு.திருமுருகன்*
*சிவபூமி பத்திரிகை ஆசிரியர்*





கனகராயன்குளம் மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவானது மிகச்சிறப்பாக 26.06.2023 அன்று நடைபெற்றது.





# ஒரு தாயின் உறுதி!

இன்றைய பெற்றோர் பலர் தங்களுடைய குழந்தைகளுக்கு லேசான காய்ச்சல், இருமல் என ஏதாவது நோய்த்தொற்று ஏற்பட்டாலே பதறிவிடுகிறார்கள்.

ஆனால், கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் பகுதியில் உள்ள பம்மத்தைச் சேர்ந்த சத்தியபாப்பா, மாற்றுத்திறன்கொண்ட தன்னுடைய குழந்தைகள் வாழ்க்கையில் சாதித்துக்காட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவருகிறார்.

அந்தக் குழந்தைகளில் இருவருக்கு முப்பது வயதுக்கும் மேல், ஒருவருக்கு 28 வயது என்பது சத்தியபாப்பாவின் பொறுமையின் மதிப்பை நமக்குச் சொல்கிறது.
சத்தியபாப்பா - தேவதாசன் தம்பதிக்குப் பிறந்த மூன்று குழந்தைகளுமே பிறப்பிலேயே மனவளர்ச்சி குன்றியவர்கள். ராஜேஸ்வரி (32), ராஜேஷ் (30), ராஜலட்சுமி (28) மூவரும் திருமண வயதை நெருங்கிக்கொண்டிருந்தாலும் அவர்கள் தற்போதும் மனதளவில் குழந்தைகளாகவே உள்ளனர்.

இவர்களின் இந்த நிலைமையைப் பார்த்து மனம் நொந்துபோன தேவதாசன் ஓராண்டுக்கு முன்பு தற்கொலை செய்துகொண்டார். தன்னுடைய பிள்ளைகளின் நிலைமையை நினைத்துத் தோள் சாய்ந்து அழவும் ஆற்றுப்படுத்தவும் இருந்த துணையும் விட்டுப் பிரிந்த நிலையில் தன்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு இடம்கொடுக்காமல் குழந்தைகளை வீட்டிலேயே வைத்து கவனித்துவருகிறார் சத்தியபாப்பா.

“16 வயதிலேயே பெற்றோர் எனக்குத் திருமணம் செய்துவைத்துவிட்டார்கள். அதனாலதானோ என்னவோ என்னோட மூணு குழந்தைகளும் மனவளர்ச்சி குன்றியவர்களாகப் பொறந்துட்டாங்கன்னு நினைக்கிறேன். பிறந்தபோது அவங்க மூணு பேருமே மற்ற குழந்தைகள் மாதிரி ஆரோக்கியமாகத்தான் இருந்தாங்க. ஆனால், நாளாக நாளாக அவர்களின் கழுத்து பலம் இழந்துடுச்சு.

நேரா நிற்காம தொங்கிடுச்சு. அதன் பின்னர் குழந்தைகளோட நடவடிக்கை சாதாரண வளர்ச்சியைவிடக் குறைவாக இருப்பதை உணர்ந்தேன். ஐந்து வயதானபோது பேச்சு, நடவடிக்கை எல்லாம் மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளைப் போல் இருப்பதைப் பார்த்து அதிர்ந்தேன். சிலருக்கு ஒரு குழந்தை மாற்றுத் திறனுடன் பிறப்பதுண்டு. எனக்கு மூணு குழந்தைகளுமே மனவளர்ச்சி குன்றியவர்களாகப் பிறந்ததை நினைத்து நான் அடைந்த மனவேதனையைச் சொல்ல வார்த்தை இல்லை.

ஆட்டோ வைத்து தொழில் செய்துக்கிட்டு இருந்த என் கணவரும் 30 வயதைக் கடந்த குழந்தைகள் படும் சிரமத்தைப் பார்த்து மன உளைச்சலில் தற்கொலை செய்துகொண்டார். இப்போ வீட்டு முன்னாடி வைத்துள்ள கடையை வாடகைக்குவிட்டு அந்த வருமானத்தை வைத்து குடும்பத் தேவையைக் கவனிச்சுக்கிட்டு வர்றேன்” என்கிறார் சத்தியபாப்பா.

தன்னுடைய கவலைகளை மறக்க உதவியாக இருப்பவை வீட்டு மாடியில் வைத்துள்ள பூஞ்செடிகள்தான் என்கிறார். “நட்ட செடிகள் பூத்துக் குலுங்குவதைப் பார்த்து என் குழந்தைகள் ஆனந்தப்படும்போது, என் அனைத்துக் கவலையும் மறந்து போய்விடும். இதைப் போல் நாட்டுக் கோழிகளையும் புறாக்களையும் வளர்த்துக்கிட்டு வர்றேன். அதுகளும் என்னோட குழந்தைங்கதான்” என்கிறார் அவர்.

பெண் குழந்தைகள் இருவரையும் பாதுகாத்துப் பராமரிப்பதைப் பெரும் சவாலாக ஏற்று செய்துவருகிறார் சத்தியபாப்பா.

“இன்பம், துன்பம், உடல்ரீதியான உணர்வு போன்ற எதுவும் என்னோட குழந்தைகளுக்குத் தெரியாது. அவர்கள் சொல்ல நினைப்பதை வார்த்தையில் வெளிப்படுத்த அவர்களுக்குத் தெரியாது. ஏதாவது வேண்டும் என்றால்கூடச் சிறு குழந்தைகள் போல்தான் அவர்கள் பேசுவார்கள்.

இந்த நிலைமையில் உள்ளவர்களை மாற்றுத் திறனாளிகளுக்கான காப்பகங்களில் விட்டால், அங்கே என் குழந்தைகளை நல்லபடியாகப் பார்த்துக்கொள்வார்களா இல்லை திட்டுவாங்களோன்னு



எனக்குப் பயம். அதையெல்லாம் என்னால தாங்கிக்கவே முடியாது. அதனாலதான் என் குழந்தைகளை நானே வீட்டில் வைத்து கவனிச்சிக்குறேன்” என்கிறார் அவர்.

“எனது காலம்வரை என்னோட குழந்தைகளை நான் சுமப்பேன். இவங்களை ஏதாவது மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் அறிதல் வகுப்பில் சேர்த்து சாதனை படைக்கவைக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. அதற்கான உதவியைச் செய்ய யாராவது முன்வந்தால் நன்றாக இருக்கும்.

என் மகன் ராஜேஷ், 85 சதவீத வளர்ச்சி மிக்கவன் என்ற சான்றை மாற்றுத் திறனாளர் துறையினர் வழங்கியுள்ளனர். நாம் பொறுமையாகச் சொன்னால் ஓரளவு புரிந்துகொள்வான். இவனுக்கு ஏதாவது வழி கிடைத்தால் அதைவிட சந்தோஷம் எனக்கு எதுவும் இல்லை” என்று கண்ணீர் மல்கச் சொல்கிறார் சத்தியபாப்பா.



## சிவத்தமிழ் செல்வியின் 15வது குருபூசை

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 30.06.2023 உலகம் போற்றும் அன்னையின் 15வது குருபூசை நிகழ்வுகள் நடைபெற்றன.

செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமையில் நடந்த இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

இவ் விழாவில் மூத்த சிவாச்சாரியர்களான இரத்தினசாபாவதிக் குருக்கள், முத்துக்குமாரசாமிக் குருக்கள், கெங்காதரக் குருக்கள் மற்றும் சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களின், சேவையினை கௌரவித்து மூத்த சிவாச்சாரியர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.
















# 20 ஆண்டுகள் நிறைவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை




















யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று 25 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே. அகிலன் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறையில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறையில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.




தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் 24.06.2023 அன்று பாடசாலையில் கோலாகலமாக நடைபெற்றது.





# தெய்வக் குழந்தைகள்

**'குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள் மழலைச் சொல்கேளாதவர்'**

என்கிறார் வள்ளுவர்.

குழந்தைகளின் மழலை மொழியின் இனிமையை உணராதவர்கள் யாழிசை, குழலிசை போன்றவற்றை இனிது என்கின்றனராம். குழந்தைகளையும், மழலை பேச்சையும் விரும்பாதவர்கள் இல்லை. கல் நெஞ்சையும் கரைய வைக்கும் மென்மை மழலைகளுக்கு மட்டுமே உண்டு. குழந்தைகள் கள்ளம் கபடம் இல்லாதவர்கள்:. அதனால்தான் அவர்களை தெய்வத்துடன் ஒப்பிடுகிறோம். ஆனால், சமீபகாலமாக நம்மிடையே தெய்வத்துக்கும் மேலான குழந்தைகள் அதிகரித்து வருகின்றன. ஆம், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் தான் அந்த தெய்வக் குழந்தைகள்!

நவீன மருத்துவம், நாளொரு ஆராய்ச்சியும் பொழுதொரு கண்டுபிடிப்புகளுமாய் அதிவேகமாய் வளர்ந்து வருவதை மறுப்பதற்கில்லை. எனினும் சில கொடிய நோய்களுக்கு அல்லது குறைபாடுகளுக்கு நவீன மருத்துவத்தால்கூட தீர்வுகாண முடியவில்லை என்பதே கசப்பான உண்மை. அதில் குறிப்பிடத்தக்க ஒரு குறைபாடு அல்லது நோய், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள். இதுபோன்ற குழந்தைகளுக்கு போதிய சிந்தனை சக்தி, ஞாபகசக்தி இருப்பதில்லை. மூளையில் ஏற்படும் பாதிப்புகளுக்கு ஏற்ப உடலில் குறைபாடுகள் இருக்கும். மாறு கண், முட்டைக்கண், காது கேளாமை, கை, கால் செயல் இழப்பு, எச்சில் ஒழுகுதல் என அவலட்சணமாக தோற்றமளிக்கும்.

மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகள் பிறப்பதற்கு பல காரணங்களை மருத்துவர்கள் கூறுகின்றனர். நெருங்கிய உறவில் திருமணம் (இதுபற்றி இன்னும் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. எனினும், மருத்துவர்கள் கேட்கும் முதல் கேள்வி இது), கர்ப்பிணிகள் தவறான மருந்துகளை சாப்பிடுவது, கீழே விழுந்து அடிபடுதல் போன்றவை முக்கியக் காரணங்களாகின்றன. மருத்துவர்களுக்கு போதிய அனுபவம் இல்லாமை, கவனக்குறைவு போன்றவைகளும் சில நேரங்களில் காரணங்களாகி விடுகின்றன.

பிறந்தவுடனேயே குழந்தைகள் அழவேண்டும். அப்போதுதான் மூளைக்கு ரத்த ஓட்டம் பாய்ந்து, அதில் உள்ள செல்கள் செயல்பட துவங்கும். பிறந்தவுடன் அழாத குழந்தைகளின் மூளை செல்கள், ரத்தம் ஓட்டம் இன்றி இறந்துவிடுகின்றன. இதனால் அந்த குழந்தைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகிறது.

இதுபோன்ற குழந்தைகளை சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்ற பிற மருத்துவ முறைகளின் மூலமாகவும் குணப்படுத்தமுடியும். இது தவிர, மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளியில் சேர்க்கும்படியும் பெரும்பாலான மருத்துவர்கள் பரிந்துரை செய்கின்றனர்.

இதனால் சமீபகாலமாக, நர்சரி பள்ளிகள் போன்று, மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிகளும் உலகளாவிய ரீதியில் அதிகளவில் தோன்றி வருகின்றன. அந்த வகையில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை இலங்கையில் மகத்தான சேவைகளை ஆற்றி வருகின்றது.

மனவிருத்தி குன்றிய குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காகவே ஆசிரியர், ஆசிரியைகளுக்கு சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்களின் மன வளர்ச்சியைத் தூண்டக் கூடிய தனித்த பாடத் திட்டங்கள் மற்றும் உபகரணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு ஏற்ப, பிசியோதெரபி, பேச்சுப் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மன வளர்ச்சிக் குன்றிய குழந்தைகளை பொருத்தவரை, அவர்கள் தங்களது தேவைகளை தாங்களே பூர்த்திச் செய்துக்கொள்ளும் நோக்கில்தான் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. முறையான மருத்துவச் சிகிச்சை, பராமரிப்பு, பயிற்சி போன்றவற்றை அளிப்பதன் மூலம், அவர்களாலும் சாதாரண குழந்தைகளுக்கு இணையாக பல்வேறு சாதனைகளை நிகழ்த்த முடியும்.


எனவே, மன வளர்ச்சிக் குன்றிய குழந்தைகளின் பெற்றோர்கள், சமூகத்தின் பார்வைக்கு பயந்து தங்களது சிறப்புக் குழந்தைகளை வீட்டுக்குள் பூட்டி வைக்காமல் சிவபூமி மனவிருத்தி பாடசாலை போன்ற விசேட பள்ளிகளில் சேர்த்து முறையான பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளும் வாழப் பிறந்தவர்களே என்பதை உணர்ந்து, அவர்களை ஊக்குவிப்போம். எதிர் காலத்தில் ஓர் ஆரோக்கியமான இளைய சமுதாயம் உருவாக வழிவகை செய்வோம்!.



நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி திருவாசக அரண்மனையின் வருடாந்த அலங்கார உற்சவம் 22.06.2023 ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தினமும் பகல்12.00 மணிக்கு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.







சிவபூமி முதியோர் இல்லத்தில் மணிவாசகர் குருபூசையினை முன்னிட்டு தமிழகத்தின் குமாரவயலூர் பாலச்சந்திர ஓதுவார் அவர்கள் கலந்து கொண்ட சிறப்பு நிகழ்ச்சி 23.06.2023 அன்று நடைபெற்றது. ஓதுவாரால் திருவாசக அர்ப்பணம் செய்யப்பட்டது. எமது முதியவர்களும் பக்திப் பரவசத்தோடு வழிபாட்டில் ஈடுபட்டார்கள்.







விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் எனும் செயற்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகளை அபயம்,சிவபூமி, துமி அமைப்புக்கள் இணைந்து நடாத்தி வருகின்றன. இதன் ஒரு அங்கமாக நடைபெற்ற ஓவிய கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும், கலைநிகழ்வுகளும் யா/வட்டு இந்துக் கல்லூரியில் சமூகநெறிக் கழகத்தின் ஊடாக 23.06.2023 நடைபெற்றது.



